நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 468/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் |
| தந்தை / கணவர் பெயர் | : | வையாபுரி |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 57 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 10–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.17 PM

1. நான் கஷ்பா காட்டுவளவில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். எங்களுக்கும் எதிரிகளுக்கும் நிலம் பிரச்சனை இருந்து வருகிறது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மதியம் 2.00 மணியளவில் ஆட்டுக்கு தழை ஒடிக்க சென்றேன்.

2. என்னை அப்போது அய்யம்மாள் என்னுடைய கழுத்தில் துண்டைப்போட்டு பிடித்து இழுத்துக்கொண்டார். அம்மாசி ஆட்டுக்கு தழை ஒடுக்கும் கத்தி சல்லையால் என்னுடைய முதுகில் கிழித்துவிட்டார். அதன்பிறகு நான் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். நான் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக 9 நாட்கள் இருந்தேன்.

3. போலீசார் மருத்துவமனை வந்து என்னை விசாரித்தனர். அதில் நான் கைரேகை வைத்தேன். நான் நடந்ததை சொன்னேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.(**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** ஆஜர் எதிரிகள்தான் என்னை அடித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 04.05.2021 ம் தேதி எனது அண்ணன் அம்மாசியின் சாலை மற்றும் அட்டை வீட்டை நான், எனது மனைவி பழனியம்மாள், எனது மகன் தங்கராஜ், எனது தம்பி பழனிசாமி, பழனிசாமி மனைவி மகேஷ்வரி, பழனிசாமி மகன் செல்வகுமார் ஆகியோர் சேர்ந்த நெருப்பு வைத்துவிட்டதாக எனது அண்ணன் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண்.135/2022 என்ற எண்ணில் போலீசார் வழக்கு பதிவுசெய்துள்ளார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அது சாலை வீடு அல்ல. அட்டை வீடு. எரிந்ததை நான் பார்க்கவில்லை.

2. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் நான், எனது மனைவி பழனியம்மாள், எனது மகன் தங்கராஜ், எனது தம்பி பழனிசாமி, பழனிசாமி மனைவி மகேஷ்வரி, பழனிசாமி மகன் செல்வகுமார் ஆகியோர் சாட்சிகளாக உள்ளனரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என்னை மருத்துவமனையில் வைத்து வாக்குமூலம் சொன்னதோடு சரி. மற்ற விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது.

3. மருத்துவமனையில் வாக்குமூலம் பெற்ற பிறகு அதன்பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின்போது நான் தான் சல்லை கத்தி எடுத்துக்கொண்டு எதிரிகளின் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல. நான் கத்தியை எடுத்து செல்லவில்லை. அது ரோடாகும். எதிரிகளின்

வீடு அல்ல. ஆனால் அந்த இடத்திற்கு நுழைய எதிரிகள் விடமாட்டார்கள்.

4. சம்பவத்திற்கு நான்கு வருடங்களுக்கு முன்பாக இருந்து அந்த இடத்திற்கு நுழைய விடாமல் பிரச்சனை செய்து வருகிறார்கள். அந்த இடம் 7 பேருக்கு பொதுவான இடமாகும். அரசாங்கத்தில் ரோடு போட்டு கொடுத்திருக்கிறார்கள். நான் மேற்படி இடத்தில் நுழைய விடாமல் தடுக்கிறார்கள் என்று காவல் நிலையத்தில் புகார் எதுவும் நான் கொடுக்கவில்லை.

5. மேற்படி என் பெரிய அண்ணன் கந்தசாமி வீட்டிற்கு செல்லும் மின் இணைப்பு கம்பியை ஆஜர் எதிரி சம்பவதன்று காலை 10.00 மணி சுமாருக்கு மின் இணைப்பை அறுத்துவிட்டார். அது சம்மந்தமாக கந்தசாமி மகன் தங்கராசு மற்றும் ஆஜர் எதிரி அம்மாசியின் மகன் சந்திரசேகர் ஆகிய இருவரும் சம்பவத்தின்போது மின்சார வாரிய அலுவலகத்திற்கு சென்றிருந்தார்கள்.

6. இதுசம்மந்தமாக நாங்கள் மின்வாரிய அலுவலகத்தில் புகார் கொடுக்கவில்லை. சமாதானம் பேசி மறுநாள் வந்து மின்இணைப்பு கொடுத்துவிட்டார்கள். காலையில்தான் சண்டை நடந்துள்ளது. ஏன் மீண்டும் அந்தஇடத்திற்கு போனேன் என்றால் ஆடுகளுக்கு தழை ஒடிக்க சென்றேன்.

7. 4 வருடமாக அந்த இடத்திற்கு போவதில்லை என்றால் சரிதான். ஆடு குட்டிப்போட்டிருந்ததால் பீயன்மரத்தழையை பறிப்பதற்காக அந்தஇடத்திற் சென்றிருந்தேன். நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் தகராறு செய்யும் நோக்கில் நான் தான் எதிரிகளின் வீட்டிற்கு சென்றேன் என்றாலும் சரியல்ல. சம்பவத்தின்போது நான் மட்டும்தான் இருந்தேன். வேறுயாரும் அங்கில்லை.

8. நான் வந்து சொல்லித்தான் மற்ற நபர்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் எழுந்து ஓடும்போது அனைவரும் வந்துவிட்டார்கள். என் அண்ணன் ஆஜர் எதிரி அம்மாசி வீட்டிற்கு முன்பாகதான் சண்டை நடந்தது என்றால் சரிதான். அந்த இடத்தை போலீசாருக்கு யார் காட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் மருத்துவமனையில் இருந்தேன்.

9. நான்கு வருடத்திற்கு முன்பு போலீசார் என்னை விசாரிக்கும்போது இரண்டு மூன்று கைரேகைகள் வைத்தேன். எழுதப்படாத வெள்ளைத்தாளில்தான் நான் கைரேகை வைத்தேன் என்றால் சரிதான். நான் கைரேகை வைத்தப்பிறகு நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். 3 தாள்களிலும் எழுதினார்கள். 3 தாள்களிலும் என்ன எழுதியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது.

10. எனதுஅண்ணனை நான்தான் அடித்துவிட்டு அவருக்கு முன்னால் மருத்துவமனையில் வந்து படுத்துக்கொண்டு எனது பெரிய அண்ணன் கந்தசாமிக்கு சாதகமாக ஆஜர் எதிரிகள் மீது பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. 4 வருடமாக அந்த தடத்தில் செல்லாமல் எதிரிகளை தாக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் சம்பவதன்று நான் அங்கு சென்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 04.45PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 468/2025

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பழனியம்மாள் |
| தந்தை / கணவர் பெயர் | : | மாரியப்பன் |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 10–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.46 PM

1. நான் கஷ்பா காட்டுவளவில் குடியிருந்து வருகிறேன். நான் தூய்மை பணியாளராக பெரியசோரகை கிராமத்தில் வேலை செய்து வருகிறேன்.அ.சா.1 மாரியப்பன் என்னுடைய கணவர் ஆவார். எங்களுக்கும் எதிரிகளுக்கும் நிலம் பிரச்சனை இருந்து வருகிறது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு காலை 10–12

மணியளவில் எனது கணவர் ஆட்டுக்கு தழை ஒடிக்க சென்றார்.

2. அப்போது என் கணவரின் முதுகில் கத்தி சல்லையால் ஆஜர் 1 ம் எதிரி அம்மாசி கீறிவிட்டார். 2 ம் எதிரி அய்யம்மாள் என் கணவரின் கழுத்தில் துண்டுபோட்டு இழுத்துவிட்டார். நான் சண்டையை வீட்டிலிருந்து நேரில் பார்த்தேன். பிறகு என் கணவரை மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான், என் கணவர் மாரியப்பன், எனது மகன் தங்கராஜ், எனது மச்சாண்டார் பழனிசாமி, பழனிசாமி மனைவி மகேஷ்வரி, பழனிசாமி மகன் செல்வகுமார் ஆகியோர் மீது ஆஜர் எதிரியின் வீட்டில் நெருப்பு வைத்தது சம்மந்தமாக வழக்கு போட்டார் என்றால் சரிதான். 10 வருடமாகவே எங்களுக்கும் எதிரிகளுக்கும் நிலம் சம்மந்தமான முன்விரோதம் இருந்தது.

2. எதிரிகள் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும். எங்கள் வீட்டில் இருந்து பார்த்தால் எதிரிகளின் வீடு தெரியாது என்றால் சரிதான். என் கணவர் சம்பவயிடத்திலிருந்து நேராக மருத்துவமனைக்கு தான் சென்றார். என் கணவரை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது.

3. நான் தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. என்னை போலீசார் எதுவும் விசாரிக்கவில்லை. என் கணவர் மருத்துவமனையில் இருக்கும் விவரம் மாலைதான் எனக்கு தெரியும். எனது கணவரை பார்க்க சென்ற ஒரு நபர் எனக்க போன் செய்து தகவல் சொன்னார்கள். நான் அடுத்தநாள் மருத்துவமனை சென்றேன். எனது மகன் தங்கராஜ், எனது மச்சாண்டார் பழனிசாமி, பழனிசாமி மனைவி மகேஷ்வரி, பழனிசாமி மகன் செல்வகுமார் ஆகியோர் இரண்டு நாட்கள் கழித்து மருத்துவமனை சென்று பார்த்தார்கள்.

4. மேற்படி நபர்களை போலீசார் ஏதேனும் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. நீண்ட காலமாக என் கணவருக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் பிரச்சனை

இருந்தது வந்தது என்றால் சரிதான். என் கணவர்தான் ஆஜர் எதிரியை அடித்துவிட்டு அவர்கள் புகார் கொடுத்துவிடுவார்கள் என்ற பயத்தில் எங்களுக்கு கூட தெரியாமல் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்தார் என்றால் சரியல்ல.

5. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் என் கணவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 05.00 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC. No. 468/2025**

**P.W.3 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மகேஷ்வரி |
| தந்தை / கணவர் பெயர் | : | பழனிசாமி |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW3** |
| வயது | : | 48 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 10–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 05.01 PM

1. நான் கஷ்பா காட்டுவளவில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மாரியப்பன் என்னுடைய உறவினர் ஆவார். அ.சா.1 மற்றும் அ.சா.2 குடும்பத்தாருக்கும், எதிரிகளுக்கும் நிலம் பிரச்சனை இருந்து வருகிறது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மதியம் 02.00 மணியளவில் அ.சா.1

எங்கள் காட்டிற்கு கீழே  ஆட்டுக்கு தழை ஒடிக்க சென்றார்.

2. அப்போது அ.சா.1 ன் முதுகில் கத்தி சல்லையால் ஆஜர் 1 ம் எதிரி அம்மாசி கீறிவிட்டார். 2 ம் எதிரி அய்யம்மாள் அ.சா.1 ன் கழுத்தில் துண்டுபோட்டு இழுத்துவிட்டார். நான் சண்டையை வீட்டிலிருந்து நேரில் பார்த்தேன்.  அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான், அ.சா.1 மாரியப்பன், அ.சா.2 மற்றும் அ.சா.1 ன்  மகன் தங்கராஜ்,  எனது கணவர் பழனிசாமி,  எனது  மகன் செல்வகுமார் ஆகியோர் மீது ஆஜர் எதிரியின் வீட்டில் நெருப்பு வைத்தது சம்மந்தமாக வழக்கு போட்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. கொஞ்சமாக எறிந்திருந்தது. காலையில்தான் எனக்கு தெரியும்.

2. என் வீடு அ.சா.1 மாரியப்பன் வீட்டை தாண்டித்தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான்.  அ.சா.1 மாரியப்பனை அவரது மச்சினன் ராஜ்குமார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் மருத்துவமனைக்கு சென்று மாரியப்பனை பார்க்கவில்லை. என் கணவர்தான் சென்று பார்த்து வந்தார். என் கணவர் பழனிசாமி சம்பவத்தின்போது 4 மைலுக்கு அப்பால் வேலைக்காக சென்றிருந்தார்.

3. சம்பவத்தின்போது பழனியம்மாள், தங்கராஜ் ஆகியோர் அங்கிருந்ததை நான் பார்க்கவில்லை. கூட்டமாக இருந்ததால் நான் அருகில் சென்று பார்க்கவில்லை. என் மகன் செல்வகுமார் சம்பவத்தின்போது 1 மைலுக்கு அப்பால் தறி ஓட்டிக்கொண்டிருந்தார்.  எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் ரொம்ப காலமாகவே பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான்.

4. அ.சா.1 மாரியப்பன் தான் ஆஜர் எதிரிகளை அடித்துவிட்டு தான் மருத்துவமனையில் சேர்ந்துக்கொண்டு எதிரிகள்தான் அடித்ததாக பொய் புகார் அளித்துள்ளார் என்றால் நான் வேலைக்கு சென்றுவிட்டு வரும்போது கூட்டமாக

இருந்தது என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றாலும் என் மச்சாண்டார் அ.சா.1 மாரியப்பன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 05.10 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 468/2025

## P.W.4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | தங்கராஜ் |
| தந்தை / கணவர் பெயர் | : | மாரியப்பன் |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW4** |
| வயது | : | 27 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 10–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 05.11 PM

1. நான் கஷ்பா காட்டுவளவில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மாரியப்பன் என்னுடைய அப்பா ஆவார். அ.சா.2 என்னுடைய அம்மா ஆவார். எங்கள் குடும்பத்தாருக்கும், எதிரிகளுக்கும் நிலம் பிரச்சனை இருந்து வருகிறது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மதியம் 02.00

மணியளவில் அ.சா.1 எங்கள் ஆட்டுக்கு தழை ஒடிக்க சென்றார்.

2. அப்போது அ.சா.1 என் அப்பா எடுத்து சென்ற கத்தி சல்லையால் அ.சா.1 ன் முதுகில் ஆஜர் 1 ம் எதிரி அம்மாசி கீறிவிட்டார். நான் சண்டையை நேரில் பார்த்தேன். அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு நானும் என் தாய்மாமன் ராஜ்குமார் இருவரும் சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான், என் அப்பா அ.சா.1 மாரியப்பன், என் அம்மா அ.சா.2, எனது சித்தப்பா பழனிசாமி, அவரது மகன் செல்வகுமார், அவரது மனைவி மகேஷ்வரி ஆகியோர் மீது ஆஜர் எதிரியின் வீட்டில் நெருப்பு வைத்தது சம்மந்தமாக வழக்கு போட்டார் என்றால் சரிதான். நான் தான் என் அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன்.

2. சம்பவத்தின்போது நான் வீட்டில் இருந்தேன். என் அப்பா சத்தம்கேட்டு சம்பவயிடம் சென்றேன். அப்பொழுது என் அப்பா நின்றுப்பேசிக்கொண்டிருந்தார். ஆஜர் எதிரிகள் வீட்டிற்குள் இருந்தார்கள். என் அப்பாதான் சல்லை கத்தியை எடுத்துக்கொண்டு ஆஜர் எதிரிகளை அடிக்க சென்றார் என்றால் சரியல்ல.

3. என்னை போலீசார் ஒரு வாரம் கழித்து சம்பவயிடம் வந்தார்கள். விசாரணை செய்தனர். காவல் நிலையம் வரச்சொன்னார்கள். நீதிமன்றத்திற்கு சென்று பார்த்துகொள்ளுங்கள் என்று அனுப்பி வைத்தனர். நான் என் அப்பாவை மருத்துவமனையில் 02.45 மணி சுமாருக்கு கூட்டிச்சென்று சேர்த்தேன்.

4. எங்களுக்கும் எதிரிகளுக்கும் நீண்ட காலமாக பிரச்சனை உள்ளது. நாங்கள் 4–5 வருடமாக பேசாமல் இருக்கிறோம். சம்பவயிடம் வழியாக என் அப்பா எப்பொழுதும் செல்லமாட்டார் என்றால் சரியல்ல. அந்த வழியாகத்தான் செல்வார். இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. என் அப்பா கொடுத்த வழக்கிற்காக நான் பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 05.20 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 468/2025

## P.W.5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வகுமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | பழனிசாமி |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW5** |
| வயது | : | 24 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 10–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 05.21 PM

1. நான் பெரியசோரகையில் குடியிருந்து வருகிறேன். நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 மாரியப்பன் என்னுடைய பெரியப்பா ஆவார். அ.சா.1 ன் குடும்பத்தாருக்கும் எதிரிகளுக்கும் நிலம் பிரச்சனை இருந்து வருகிறது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மதியம் 01.00–02.00 மணியளவில் அ.சா.1 காட்டில்

ஆட்டுக்கு தழை ஒடிக்க சென்றார்.

2. அப்போது அ.சா.1 ஐ கத்தி சல்லையால் ஆஜர் 1 ம் எதிரி அம்மாசி அடித்தார். பிறகு முதுகில் அடித்ததாக சொன்னார். நான் சண்டையை நேரில் பார்த்தேன். அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் சம்மந்தமாக போலீசார் என் வீட்டில் வந்து ஒரு வாரம் கழித்து விசாரித்தார்கள். சம்பவத்தின்போது சம்பவயிடத்தில் யார்யார் இருந்தார்கள் என்றால் சம்பவம் நடந்து முடிந்த பிறகுதான் நான் சம்பவயிடத்திற்கு சென்றேன். நான் சம்பவயிடத்திற்கு போகும்போது 4 நபர்கள் இருந்தார்கள். சம்பவயிடத்தில் தங்கராஜ், அவரது அம்மா பழனியம்மாள், அம்மாசி, அய்யம்மாள் ஆகியோர் இருந்தனர்.

2. எங்களுக்கும் எதிரிகள் குடும்பத்தாருக்கும் நீண்ட காலமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். எதிரிகள் வீட்டிற்கு நெருப்பு வைத்தது சம்மந்தமாக என் அம்மா, என் அப்பா, என் பெரியப்பா, என் பெரியம்மா, என் பெரியப்பா மகன் ஆகியோர் மீது வழக்கு போட்டிருந்தார்கள் என்றால் சரிதான்.

3. இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றாலும் என் பெரியப்பா கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 05.30 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**